# சிறு துரும்பும் பல்குத்த உதவும்! அவ்வையாரும் ஐன்ஸ்டனும்!

எழுதியவர்:-- லண்டன் சுவாமிநாதன்; கட்டுரை எண்:--771 ( தேதி 1-1-12014)

‘சிறு துரும்பும் பல் குத்த உதவும்’ என்பது தமிழ் பழமொழி. ‘மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது’ என்பது ஆன்றோர் வாக்கு. எல்லோரும் உபயோகப் படத்தக்கவர்களே என்கிறது சம்ஸ்கிருத பழமொழி. எல்லோரும் அறிவாளிகளே என்கிறார் ஐன்ஸ்டைன். எல்லோரும் ஒன்றையாவது சிறப்பாக செய்து முடிப்பர் என்கிறார் அவ்வையார்.

**வான் குருவியின் கூடு, வல் அரக்கு, தொல் கரையான்,**

**தேன், சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால்;-- ‘யாம் பெரிதும்**

**வல்லோமே’ என்று வலிமை சொல வேண்டாம் காண்!**

**எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது (அவ்வையார்).**

ஒவ்வொருவனுக்கும் இறைவன் ஒரு திறமையைக் கொடுத்துள்ளான். மற்றவர்களுக்கு அது முடியாது. ஆகையால் எல்லாம் தெரிந்தவர் என்பது இல்லை. தூக்கணங் குருவியின் அழகான கூடு, இயற்கையில் பூச்சிகள் உண்டாக்கும் அரக்கு,

கரையான் கட்டும் புற்று, தேன் கூடு, சிலந்தி வலை ஆகியவற்றைப் பார்த்து வியக்கலாம். ஆனால் கட்ட முடியாது.

யார் ஒருவன் அவனவன் திறமையை அறிந்து அந்தப் பணியை அவனுக்குக் கொடுக்கிறானோ அவனே சிறந்தவன். வள்ளுவனும் இதையே கூறுவான்:

ஒரு பணியை யார் திறம்பட செய்வான் என்பதை நன்கு யோசித்து அதனை அவனிடமே விட்டுவிட வேண்டும் என்பான்:

" இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன் கண் விடல்" ( குறள் 517)

ஒரு அழகான சம்ஸ்கிருத ஸ்லோகமும் (சுபாஷிதம்=பொன் மொழி) இப்படிக் கூறுகிறது: மந்திரத்தில் உபயோகப் படாத எழுத்து என்று எதுவுமே இல்லை; மருந்தில் உபயோகிக்க முடியாத வேரோ, கிழங்கோ இல்லை; உபயோகப்படாத மனிதன்–உதவாக்கரை-- என்று எவனுமே இல்லை. ஆனால் ஒருவருடைய திறனை அறிந்து அதை சரியாகப் பயன்படுத்தும் மனிதர்கள் தான் அபூர்வம்!

## ஐன்ஸ்டைன்

உலகின் தலை சிறந்த விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டைனும் இதையே சொல்கிறார்:

"ஒவ்வொருவரும் அறிவாளியே. ஒரு மீனின் திறமையை அதற்கு மரம் ஏறத் தெரியுமா இல்லையா என்பதைக் கொண்டு தீர்மானிப்பதில்லை.

அப்படித் தீர்மானித்தால் அதற்கு வாழ்நாள் முழுதும் முட்டாள் பட்டமே கிட்டும்" (ஐன்ஸ்டைன்).

நீரில் முதலைக்கு பலம். யானைக்கு நிலத்தில் பலம் என்பதை நினவிற் கொள்க என்கிறார் வள்ளுவர்:

"நெடும் புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்

நீங்கின் அதனைப் பிற" (495)

சேற்றில் சிக்கிய யானையை நரியும் வெல்லும்.

"காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா

வேலாள் முகத்த களிறு "(500)

**வாமனாவதாரம்**

விஷ்ணுவின் பத்து (தசாவதாரம்) அவதாரங்களில் மிகவும் சிறியது வாமன அவதாரம். மூவடியால் பிரபஞ்சத்தையே அளந்தான் 'ஓங்கி உலகளந்த உத்தமன்'. இதை மனதிற்கொண்டு வள்ளுவனும் ஒருவருடைய தோற்றத்தை வைத்து ஏமாறாதே என்று எச்சரிக்கிறார்; பெரிய தேருக்கு அச்சாணி போன்றவர்கள் அவர்கள்:

உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெரும் தேர்க்கு

அச்சாணி அன்னார் உடைத்து (667)

நம் எல்லோருக்கும் இறைவன் ஒரு திறமையைக் கொடுத்துள்ளான். அதைக் கண்டுபிடித்து பட்டைதீட்டி வைரம் போல் பளபளக்க வைக்க,

ஜொலிக்கச் செய்ய ஒரு நல்ல ஆசிரியனோ குருவோ வேண்டும். அவரை நாடி நலம் பெறுவோமாக!

Contact swami_48@yahoo.com

*********